


**21. 06. 2025**

தலைப்பு செய்திகள்

1. **நவீன மருத்துவத்தில் யோகா இடம்பெற வேண்டும்** என்று அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. **தமிழகம் உட்பட நாடுமுழுவதும் 10 லட்சம்** இடங்களில் சர்வதேச யோகா சங்கம நிகழ்வுகள் இன்று நடைபெற்றன.

3. **சேலம் உருக்காலை வளாகத்தில் ராணுவ தளவாட** தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஆலோசனையில் உள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. **H.D.** குமாரசாமி கூறியுள்ளார்.

4. **தமிழகத்தில் பேருந்து வசதி இல்லாத 90 ஆயிரம்** கிராமப் புறங்களில் சிற்றுந்துகள் இயக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

5. **லீட்ஸில் இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான** முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடங்குகிறது.

❖❖❖❖❖❖

பிரதமர் - யோகா

**யோகக்கலை அனைத்து மக்களையும் அமைதிப் பாதையில்** வழிநடத்துவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

11-வது சர்வதேச யோகா தினத்தை ஒட்டி விசாகப்பட்டினம் கடற்கரையில் இன்று நடைபெற்ற பிரம்மாண்ட யோகா நிகழ்வில் பங்கேற்ற பிரதமர், யோகா தினம் உலகளாவிய மக்களை ஒருங்கிணைத்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

**ஒரே பூமி ! ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா !** என்ற இந்த ஆண்டின் கருப்பொருள், எதிர்கால வளமான உலகத்தை முன்னிறுத்துவதாக கூறினார்.

நவீன ஆய்வுகள் மூலம் யோக அறிவியலை வலுப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளில் நாட்டின் முக்கிய மருத்துவ நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

நவீன மருத்துவத்தில் யோகா இடம்பெற வேண்டும் என்ற இந்தியாவின் திட்டம் ஒட்டுமொத்த உலக மக்களின் நலத்தை நோக்கமாக கொண்ட ஒருங்கிணைந்த முயற்சி என்று பிரதமர் சுட்டிக்காட்டினார். பிரதமர் தலைமையில் எழில்மிகு இயற்கை சூழலில் லட்சக்கணக்கானோர் விசாகப்பட்டினம் கடற்கரையில் யோகா பயிற்சிகளை இனிதே மேற்கொண்டனர். இந்நாளையொட்டி நாடுமுழுவதும் 10 லட்சத்திற்கும் அதிகமான இடங்களில் யோகா சங்கம நிகழ்வுகள் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

**ஆரோக்கியமான வாழ்க்கைக்கு யோகக்கலை** அடித்தளமாக விளங்குவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

டேஹ்ராடூனில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் இன்று பங்கேற்ற அவர், பாரம்பரியத்துடன் இணைந்த யோகா உலக சமுதாயத்திற்கு பெரிதும் நன்மை பயப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

அமித்ஷா

**உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா குஜராத்** மாநிலம் அஹமதாபாத்தில் இன்று யோகாசன நிகழ்வில் பங்கேற்றார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு.ஜே.பி.நட்டா, திரு. தர்மேந்திர பிரதான், திருமதி. நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு** நாடுமுழுவதும் 10 லட்சம் இடங்களில் யோகா சங்கம நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

❖❖❖❖❖❖

**எல். முருகன்**

**தமிழகத்திலும் சர்வதேச யோகா தின நிகழ்வுகள்** களைக்கட்டின.

சென்னை தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் பற்கேற்ற மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், நம்நாட்டின் தொன்மையான யோகக்கலை 170-க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பின்பற்றப்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

.. **வாய்ஸ்** ..

**சேலத்தில் உருக்காலையில் மத்திய கனரக தொழில்துறை அமைச்சர்** திரு. H.D.குமாரசாமி தலைமையில் சர்வதேச யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖

**யோகா - மாவட்டங்கள்**

**மதுரையில் நடைபெற்ற சர்வதேச யோகா தின** நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தலைமையில் ஏராளமான மாணவ மாணவிகள் யோகாசன பயிற்சிகளை மேற்கொண்டனர்.

**நெல்லை திருமால் நகரில் நடைபெற்ற யோகா** நிகழ்ச்சியில் பி.ஜே.பி. மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

**தூத்துக்குடியில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில்** ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்லூரி மாணாக்கர், பொதுமக்கள் பங்கேற்று யோகக்கலையின் அவசியத்தை வலியுறுத்தினர்.

**தென்காசி விருதுநகர் மாவட்டங்களில் தேசிய மாணவர் படை மாணாக்கர்** பங்கேற்ற யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில்** 11-வது சர்வதேச யோகா தினம் சிறப்பாக நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

**திண்டுக்கல் காந்தி கிராம, கிராமிய நிகர்நிலை** பல்கலைக்கழகம் மற்றும் ஈரோடு திண்டல் தனியார் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**அரியலூரில்** நடைபெற்ற யோகா விழிப்புணர்வு பேரணியில் ஏராளமானோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

**முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடற்கரையில்** நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டங்களிலும் யோகாசன பயிற்சிகளில் மாணவ மாணவிகள் ஈடுபட்டனர்.

சேலத்தில் கடல்மட்டத்திலிருந்து ஆயிரத்து 400 மீட்டர் உயரத்தில் அஞ்சல்துறையினரின் யோகாசன நிகழ்வுகள் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

**ராமநாதபுரம் பாம்பன் கடலில் புதிய** ரயில்பாலத்தின் மையத்தில் ரயில்வே ஊழியர்கள் மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர் இணைந்து யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

மண்டபத்தில் கடலோர காவல்படை வீரர்கள் நீச்சல் குளத்தில் தேசிய கொடியுடன் ஜலயோகாசனம் மேற்கொண்டதை அனைவரும் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

**திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லியில்** மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் சார்பில் 50-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணாக்கர் ஆசிரியர்களின் உதவியுடன் பல்வேறு யோகாசனங்களை இன்று மேற்கொண்டனர்.

இந்த ஆசனங்கள் மனதளவில் புத்துணர்ச்சியை வழங்கி இருப்பதாக தெரிவித்தனர்.

**விருதுநகர் தனியார் கல்லூரியில் தமிழ்நாடு 28 பெட்டாலியன்** தேசிய மாணவர்படை சார்பில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

தன்னம்பிக்கை, தைரியம், மனஉறுதியை யோகா தருவதாக இதில் பங்கேற்ற மாணவி தெரிவித்தார்.

**.. வாய்ஸ் ..**

**பழனி சார்பு நீதிமன்ற நீதிபதிகள் பணியாளர்கள் மற்றும்** காவல்துறையினர் பங்கேற்ற யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மூச்சுப்பயிற்சி, சூரிய நமஸ்காரம் உள்ளிட்ட யோகாசனங்கள் நடைபெற்றன.

திருவாரூர் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் யோகாதின நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

கோவையில் இந்திய அதிரடிப்படையின் 105 பெட்டாலியன் பிரிவு சார்பில் துடியலூரில் உள்ள தலைமையகத்தில் ஈஷா யோக அறக்கட்டளை மையத்துடன் இணைந்து வீரர்கள் ஆர்வத்துடன் யோகா பயிற்சிகளை மேற்கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் மாணாக்கர் பல்கலைக்கழகத்தினர் யோகாசன நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் புலிக்குகை வளாகத்தில் தொல்லியல்துறை சார்பில் யோகாசனங்கள் இன்று நடைபெற்றது.

**கோவையில் இந்திய அதிரடிப்படையின் 105** பெட்டாலியன் பிரிவு சார்பில் துடியலூரில் அதன் தலைமையகத்தில் ஈஷா யோக அறக்கட்டளை மையத்துடன் இணைந்து வீரர்கள் ஆர்வத்துடன் யோகா பயிற்சிகளை மேற்கொண்டனர்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திலும் யோகாசன நிகழ்வு இடம்பெற்றது.

திருச்சி ஸ்ரீரங்கம் யோகப்பயிற்சி மையம், மயிலாடுதுறை உள்ளிட்ட பகுதிகளிலும் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

❖❖❖❖❖❖

**H.D.** குமாரசாமி

**சேலம் உருக்காலை வளாகத்தில் ராணுவ தளவாட** தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஆலோசனையில் உள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. H.D. குமாரசாமி கூறினார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர் இதற்கான முறையான அறிவிப்பு இன்னும 4 மாதங்களில் வெளியாகும் என்றார்.

உருக்காலையை மேம்படுத்தி மீண்டும் லாபகரமாக செயல்பட செய்வதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தி வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**மினி பேருந்து சேவை**

**தமிழகத்தில் பேருந்து வசதி இல்லாத 90 ஆயிரம்** கிராமப் புறங்களில் மினி பேருந்துகள் இயக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 103 வழித்தடங்களில் இப்பேருந்துகள் இயக்கப்படுவதன் மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான கிராம மக்கள் பயனடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 கிலோமீட்டர் தூரத்திற்கு மினி பேருந்து இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பொதுமக்கள் வசதியை கருதி குறிப்பிட்ட பகுதிகளில் மினி பேருந்துகள் இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்தில் ஐந்தரை கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. **S.S.**சிவசங்கர் துவக்கிவைத்தார். பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளையும் அவர் பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

**எடப்பாடி**

**தமிழ்நாட்டில் திமுக அரசுக்கு மக்கள் வரும்** சட்டமன்ற தேர்தலில் தக்கப்பாடம் புகட்டுவார்கள் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

கீழடி ஆய்வுகள் தொடர்பாக தமது தலைமையிலான அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பது குறித்து ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு விட்டதாக கூறினார்.

ஜனநாயக நாட்டில் அவரவர் விரும்பும் தெய்வங்களை வழிபடுவது அவர்தம் உரிமை என்றும், அந்த அடிப்படையில் நடத்தப்படவுள்ள முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**யானை வாய்ஸ்**

**தென்காசி மாவட்டம் மேற்குதொடர்ச்சி மலை** அடிவாரம் வடகரை பகுதியில் தென்னை, வாழை, மா, பலா உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தும் ஒற்றை காட்டு யானையை விரட்ட வனத்துறை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**லீட்ஸில், இங்கிலாந்திற்கு எதிரான முதல் டெஸ்ட்** கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில், நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 359 ரன் எடுத்து வலுவான தொடக்கத்தை வழங்கியுள்ளது.

ஜெய்ஸ்வாலும், அணித்தலைவர் ஷுப்மான்கில்லும் சதமடித்த நிலையில் ரிஷப்பந்த் அரை சதத்தை கடந்துள்ளார்.

ஷுப்மான்கில்லும், ரிஷப்பந்தும் தற்போது களத்தில் உள்ளனர்.

இரண்டாவது நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖